**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.167/2017 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | தங்கம்கிரேசி |
| க/பெ. | கண்ணன் |
| வயது | 49 |
| வசிப்பிடம் | எண்.244, பாரதிநகர், பரனூர், செங்கல்பட்டு |
| தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை |

**முதல் விசாரணை 09.01.2026**

நான் இந்த வழக்கில் 2ம் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 08.05.2017 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. 08.05.2017 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.2. துளசியின் இறப்பு சான்றிதழ் ஒளி நகல் ம.சா.ஆ.3. 03.07.2017 தேதியிட்ட துளசியின் வாரிசு சான்றிதழ் ஒளி நகல் ம.சா.ஆ.4. 12.12.2017 தேதியிட்ட முதல் மனுதாரரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.5. 06.03.2017 தேதியிட்ட முதல் மனுதாரரின் வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.6. எதிர்மனுதாரர் வாகன பதிவு சான்று ஒளி நகல் ம.சா.ஆ.7. எதிர்மனுதாரர் காப்பீட்டு சான்று ஒளி நகல் ம.சா.ஆ.8. எதிர்மனுதாரரின் ஓட்டுனரான எல்லப்பன் என்பவரின் ஓட்டுநர் உரிமம் ஒளி நகல் ம.சா.ஆ.9. வாகனத்தின் அனுமதி சான்று ம.சா.ஆ.10. 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை மசா.ஆ.11. 3ம் மனுதாரரின் ஆதார் அட்டை மசா.ஆ.12. 2ம் மனுதாரரின் வங்கி புத்தகத்தின் ஒளி நகல் மசா.ஆ.13 3ம் மனுதாரரின் வங்கி புத்தகத்தின் ஒளி நகல் மசா.ஆ.14.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் இறந்துபோன என் தாயாரின் வயதை காட்டக்கூடிய வயது சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் எனக்கு திருமணம்

ஆகி எனது கணவருடன் வசித்து வருகிறேன். என் தங்கையான 3ம் மனுதாரருக்கு வயது 48, அவரும் தன் கணவருடன் குடியிருந்து வருகிறார். நானும், என் தங்கையும் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறோம். என் தாயார் ரூ.200/- நாள் ஒன்றிற்கு கூலி வேலை பார்த்து வருமானம் ஈட்டியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் ஆகிய நாங்கள் என் தாயாரை சார்ந்து வாழவில்லை என்றும், என் தாயார் இறப்பால் எங்களுக்கு எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு ஈட்டுறுதி செய்ய வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றும், என் தாயாரின் கவனக்குறைவாலும், ரோட்டை அஜாக்கிரதையாக கடந்து சென்றதாலும் அவரே விபத்திற்கு காரணம் என்பதால் நான் கோரும் இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை